மங்களகரமான நிகழ்ச்சிகளை
திங்களெனத் துலங்கிட
வீடியோ படம்பிடித்திட
அஜந்தா
வீடியோ
63 சங்கிலியன் வீதி,
(முத்திரைச் சந்தையடி)
நல்லூர்.

பக்கங்கள்: நான்கு
Registered as a Newspaper

# உதயன்

விலை
ரூபா
5-00

எழிலுறு காட்சிகளுடன்
அழகுறப்படம் பிடித்திட
விஜயம் செய்யுங்கள்
அஜந்தா
போட்டோ
63, சங்கிலியன் வீதி,
(முத்திரைச் சந்தையடி)
நல்லூர்.

சுடர்: 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 புரட்டாதி 24 திங்கட்கிழமை (10 — 10 — 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 320

# படையினரின் விநியோக கப்பல்
# கடற்புலிகள் தாக்கி மூழ்கடிப்பு!

## வெற்றிலைக்கேணி கடலில் வெற்றிகரமான தாக்குதல்

யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 10

ஸ்ரீலங்கா படையினருக்கு ஆயுதங்கள், வெடிமருந்துகள் மற்றும் உணவுப் பொருள்களை விநியோகிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பாரிய கப்பல் ஒன்றை கடற்புலிகளின் விசேட அணி நேற்று அதிகாலை 3.40 மணியளவில் தாக்கி மூழ்கடித்தது.

வெற்றிலைக்கேணி கடற்பரப்பில் தரித்துநின்று வெற்றிலைக்கேணி, ஆனையிறவு படைத்தளங்களுக்கான விநியோக வேலைகளை மேற்கொண்டிருந்த "ஓஷன் டிரேடர்" என்ற கப்பலே மூழ்கடிக்கப்பட்டது.

இத்தாக்குதலின் போது கடற்புலிகள் தரப்பில் சேதம் ஏதும் ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

பல ஆயிரம் தொன் நிறையும் முன்னூறு அடிக்கு மேல் நீளமும் உடைய இக்கப்பல் 1200 தொன் பொருள்களை இராணுவ வள்ளம் ஒன்றுக்கு மாற்றுவதற்காக வெற்றிலைக்கேணி கடலில் நங்கூரமிட்டிருந்தவேளை தாக்குதலுக்கு இலக்காகி மூழ்கடிக்கப்பட்டதாக ஸ்ரீலங்கா படை வட்டாரங்கள் தெரிவித்தன.

வெற்றிலைக்கேணி கரையிலிருந்து சில கடல் மைல் தொலைவில் தரித்து நின்ற போதே கப்பல் தாக்குதலுக்கு இலக்கானது.

இக்கப்பலை இராணுவத்திற்கு உணவுப் பொருள்களை எடுத்துச் செல்வதற்காக புனர்வாழ்வு அமைச்சு வாடகைக்கு அமர்த்தியிருந்தது என்றும் அறிவிக்கப்பட்டது.

## கப்பலில் இருந்த ராடர் கருவியை கடற்புலிகள் கழற்றிச் சென்றனர்

### ஊழியருக்கு எந்த தீங்கும் விளைவிக்கவில்லை

"ஓஷன் டிரேடர்" கப்பல் மூழ்கடிக்கப்படுவதற்கு முன்னர் அதிலிருந்த நவீன ராடர் கருவிகளையும் தொலைத்தொடர்பு சாதனங்களையும் புலிகள் கைப்பற்றி மீட்டு வந்தனர்.

கடற்புலிகளின் அணி ஒன்று நங்கூரமிட்டிருந்த கப்பலின் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்த பின் இரு பகுதிகளில் இருந்து வெடி குண்டுகள் கொண்டு அதனைத் தகர்த்ததாகவும் —

கப்பல் நீரில் மூழ்கிக் கொண்டிருந்த போது அதில் ஏறிய கடற்புலிகள் ராடர் சாதனங்களையும் ஏனைய உபகரணங்களையும் அகற்றிச் சென்றனர் என்றும் —

அவ்வேளை அக்கப்பலில் இருந்த ஊழியர் எவருக்கும் கடற்புலிகள் எந்தத் தீங்கையும் இழைக்கவில்லை என்றும் —

பலாலி இராணுவ அதிகாரி ஒருவரை மேற்கோள்காட்டி ஸ்ரீலங்கா வானொலி அறிவித்தது.

## கப்பல் தகர்க்கப்பட்ட சம்பவம் பேச்சுக்களை பாதிக்க மாட்டாது

### லயனல் அறிவிப்பு

வெற்றிலைக்கேணியில் கப்பல் தகர்க்கப்பட்ட தாக்குதல் சம்பவம் அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான உத்தேசப் பேச்சுவார்த்தைகளை எவ்விதத்திலும் பாதிக்காது.

தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சின் செயலாளரும், அரசுப் பிரதிநிதியாக பூர்வாங்கப் பேச்சுக்களில் பங்குபற்ற யாழ். வரவிருப்பவருமான லயனல் பெர்னாண்டோ மேற்கண்டவாறு கூறினார்.

பிரகடனப்படுத்தப்படாத வகையில் யுத்தநிறுத்தம் கடைப்பிடிக்கப்படுவதை அனைவரும் ஏற்றுக் கொண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

போர் நிறுத்தம் பற்றிய அரசதரப்பின் கருத்து எதனையும் தற்போது தெரிவிக்க இயலாது என்றும் அவர் சொன்னார்.

[உ-எ-6]

## அரசாங்கம் தானாகவே முன்வந்து யுத்த நிறுத்தத்தை அறிவித்திருக்கலாம்

### இனி இணங்குவது அழுத்தத்துக்கு பணிவதாக இருக்கும்

அரசு தானாகவே முன்வந்து யுத்த நிறுத்தத்தை அறிவித்திருந்தால் அது அரசுக்கு கௌரவமாக இருந்திருக்கும். ஆனால் தற்போது விடுதலைப் புலிகள் தமது பல தாக்குதல்களின் மூலம் கொடுக்கும் அழுத்தத்தினால் இனிமேல் யுத்த நிறுத்தத்துக்கு அரசு இணங்குவது, அந்த அழுத்தத்துக்கு அரசு பணிந்ததாக ஆகும். இது அரசுக்கு பின்னடைவும் ஆகும்.

விமர்சகர்கள் இவ்வாறு கருத்து வெளியிட்டிருப்பதாக "ரோய்ட்டர்" செய்தி நிறுவனம் தெரிவித்தது.

யுத்த நிறுத்தத்தைப் பிரகடனம் செய்யும்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வடமராட்சி கிழக்கில் சிறுமி, இளைஞர் விமான, ஷெல் தாக்குதல்களில் பலி!

வடமராட்சி கிழக்குப் பகுதி மக்கள் குடியிருப்புகள் மீது படையினர் நேற்றுக் காலை நடத்திய விமான மற்றும் ஷெல் தாக்குதல்களால் இளைஞர் ஒருவரும், சிறுமி ஒருத்தியும் உயிரிழந்தனர்.

பொம்மர்கள், புக்காரா ஹெலி என்பன அப்பகுதிகளில் மாறி மாறித் தாக்குதல்களை நடத்தின.

உடுத்துறைப் பகுதியில் இடம்பெற்ற விமானக் குண்டு வீச்சிலே ஆறு வயதுச் சிறுமி உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கப்பல் ஊழியர்கள் 16 பேரும் மீட்பு

மூழ்கடிக்கப்பட்ட கப்பலில் பணியாற்றிய 16 ஊழியர்களும் கப்பல் மூழ்கியபோதும் பாதுகாப்பாக மீட்கப்பட்டுவிட்டனர் என்று கொழும்பில் பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

உயிரிழப்பு ஏதும் இத்தாக்குதல் சம்பவத்தின்போது இடம்பெறவில்லை.

தாக்குதல் இடம்பெற்றதை அடுத்து ஹெலிக்கொப்டர் ஒன்று வெற்றிலைக்கேணி கடற்பகுதி மீது பறந்து நோட்டமிட்டவாறு இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

## மூழ்கும் கப்பலை மக்கள் பார்த்தனர்

யாழ்ப்பாணம், ஒக். 10

கடற்புலிகளால் தகர்க்கப்பட்ட கப்பல் நீரில் மூழ்குவதை வடமராட்சி கிழக்குப் பகுதி மக்கள் கரையில் நின்று பார்த்தனர்.

கப்பலின் பின்புறமே முதலில் நீரில் மூழ்க ஆரம்பித்தது. நண்பகல் அளவில் கப்பலின் முன்பக்க முனை மட்டுமே நீர்மட்டத்திற்கு வெளியே தெரிந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

## கப்பல் தகர்ப்பு முக்கிய செய்தி

வெற்றிலைக்கேணிக் கடற்பகுதியில் பாரிய கப்பல் விடுதலைப் புலிகளால் தகர்க்கப்பட்ட சம்பவம் பற்றிய செய்தியை வெளிநாட்டு செய்தி நிறுவனங்களும், செய்தி ஏஜென்ஸிகளும் முக்கியத்துவம் கொடுத்து நேற்று வெளியிட்டன.

## சிங்கப்பூரில் சந்திரிகா

தமது முதல் வெளிநாட்டு பயணம் ஒன்றை மேற்கொண்டு பிரதமர் சந்திரிகா சிங்கப்பூர் சென்றார். அங்கு அவர் மூன்று நாள் தங்கியிருப்பார்.

தமது சொந்த விஜயமாக அங்கு சென்றுள்ள பிரதமருடன் அவரது செயலாளர் பத்மா மகாராஜாவும் சென்றுள்ளார். (உ-ஐ)

### களப்பலியான முதல் பெண்புலி

## மாலதி நினைவாக இன்று ஊர்வலம், பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், ஒக். 10

தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் வீரச்சாவடைந்த முதல் பெண்புலிப் போராளி 2 ஆம் லெப்டினன்ட் மாலதியின் 7 ஆம் ஆண்டு நினைவு நாள் இன்றாகும்.

இதனை ஒட்டி கோப்பாய் — கைதடி வீதியில் அமைக்கப்பட்டுள்ள மாலதியின் நினைவுக் கல்லறையில் இன்று காலை 8 மணிக்கு வீரவணக்க நிகழ்வுகள் இடம் பெறும். தொடர்ந்து பிற்பகல் 3 மணிக்கு யாழ் நகரில் நினைவு ஊர்வலம் நடைபெறவுள்ளது. ஊர்வலத்தைத் தொடர்ந்து பொதுக்கூட்டமும் இடம்பெறும்.

கடந்த 87 ஆம் ஆண்டு

(4ஆம் பக்கம் பார்க்க)

## தமிழீழ பெண்களின் வீர வரலாற்றுக்கு அடி எடுத்துக் கொடுத்தவள் மாலதி!

### மகளிர் அமைப்பினர் அஞ்சலி

யாழ்ப்பாணம், ஒக். 10

"எண்ணற்ற வீராங்கனைகளின் ஈகங்களாலே தமிழீழப் பெண்ணினத்தின் வீர வரலாறு இன்று எழுதப்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்த வீர வரலாற்றுக்கு அடி எடுத்துக் கொடுத்து — வரலாற்றின் முதல் அத்தியாயமாக அமைந்து விட்டவள் மாலதி"

வீரச்சாவடைந்த முதல் பெண் புலி 2 ஆம் லெப். மாலதியின் 7 ஆம் ஆண்டு நினைவு நாளை ஒட்டி விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பு வெளியிட்ட பத்திரிகைக் குறிப்பில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெண்கள் எவரும் வீட்டுக்கு வெளியே வராத — வெளியுலகைப் பார்க்க அனுமதிக்கப்படாத — கால கட்டத்தில் தன்னைத் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இணைத்துக் கொண்டாள் இந்த வீராங்கனை. பெண்கள் மீது பாரிய அழுத்தங்களைப் பிரயோகித்துவரும் எமது சமூகத்துக்கும், எம் இனத்தின் மீது வன்முறையையும் ஒடுக்குமுறையையும் கட்டவிழ்த்து வரும் சிறீலங்கா இராணுவத்துக்கும் ஒரு சவாலாக இவள் எழுந்தாள்.

தமிழீழ விடுதலைப் புலிகள் முதலாவது பெண்கள் அணியாக இவளும் இவளது தோழியர்களும் எம் மண்ணில் ஆயுதங்களை ஏந்தி நடமாடத் தொடங்கியபோது, ஈழப் பெண்ணினம் தன்னைத் தனது அடுத்த கட்ட வளர்ச்சிக்குத் தயார்ப்படுத்திக் கொண்டது.

இந்த நேரத்தில், எம் மக்களை சிறீலங்கா அரசிடமி

(4ஆம் பக்கம் பார்க்க)

### பொதுத் தேர்தல் முடிந்த கையோடு

## புலிகளுடன் பேச டி.பியும் ஏற்கனவே எண்ணியிருந்தார்

### காமினி தகவல்

கொழும்பு, ஒக். 10

நாடாளுமன்றத் தேர்தல் முடிவடைந்ததும் விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு ஜனாதிபதி விஜேதுங்க எண்ணியிருந்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரான காமினி திஸநாயக்கா முன் கண்டவாறு தெரிவித்தார்.

தேர்தல் நியமனப்பத்திரங்களைத் தாக்கல் செய்த பின்னர் ஸ்ரீகோதாவில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் அவர் இதனை அறிவித்தார்.

அவர் மேலும் சொன்னதாவது:

இவ்வாரம் அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே ஆரம்பமாகும் பேச்சுவார்த்தையை நான் வரவேற்கின்றேன். அவர்களுடன் அரசு பேசட்டும்; கவனமாக நடந்து கொண்டு

(4 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைஅரசு-புலிகள் பேச்சுக்களை இந்தியா உன்னிப்பாக கவனிக்கிறது

### இணை அமைச்சர் பைலட் பேட்டி

புதுடில்லி, ஒக். 10

இலங்கையில், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்துக்கும் இடையில் இடம்பெற்று வரும் நடவடிக்கைகள் குறித்து நாம் மிகவும் உன்னிப்பாக அவதானித்து வருகிறோம்.

இந்நடவடிக்கைகள் சம்பந்தமாக அக்கறையுடையவர்களாகவும் உள்ளோம்.

— இவ்வாறு தெரிவித்துள்ளார் இந்தியாவின் உள்துறை இணை அமைச்சர் திரு. ராஜேஷ் பைலட்.

பி.பி.ஸி. தமிழ்த்திய தொலைபேசி செவ்வி ஒன்றில் ஸ்ரீலங்காவைச் சேர்ந்த சிறி பெரோரா என்பவர் கேட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அந்தச் செவ்வியின் கேள்வி — பதில் விவரம் வருமாறு:-

கேள்வி: இலங்கையில், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்துக்கும் இடையில் நடைபெறவுள்ள பேச்சு

(4ஆம் பக்கம் பார்க்க)




யாழ். றோட்டறிக் கழக ஆதரவில், யாழ்ப்பாணப் பாடசாலைகளின் இன்ரறக்ட் கழகங்களின் மாநாட்டின் அங்குரார்ப்பண விழா யாழ். இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் சனிக்கிழமை பிற்பகல் நடைபெற்றது.

இவ்விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட இலங்கை றோட்டறி மாவட்ட முன்னாள் ஆளுநர் சுரேஸ் மெல்வானி உரையாற்றுவதையும் —

மேடையில் (இடமிருந்து வலமாக) டாக்டர் சிறி இரத்னகுமார், றோட்டேறியன் குஷில் பி. குணசேகரா, யாழ். றோட்டறிக் கழகத்தலைவர் எ. சரவணபவன், றோட்டேரியன் ஜானக எதிரிசிங்கா, தமிழீழக் [illegible] இளங்குமரன், மதிப்பு விருந்தினர் கே. பரமேஸ்வரன் ஆகியோர் அமர்ந்துள்ளனர்.

[படம்: சர்வானந்தா]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

3 அங். 4 அங். எஸ்லோன் பைப்புகள், எனாமல் பெயின்ற் ரின்கள், பிளாஸ் ரிக் பாத்திரங்கள், அலுமினியம் ஆப்ப தாச்சிகள், பொலித்தீன்தாள், சொப்ரிங் பாக் சகல அளவுகளிலும் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. நாதன் களஞ்சியம், இல. 213C, கிட்டுசாலை, மருத்துவமனை வீதி, யாழ்ப்பாணம். (33180)

ஹம்பர் சைக்கிள், ஸ்பிறிங் கட்டில் (டபுள்), ஷோகேஸ் (பழையது) விற்பனைக்கு உண்டு. ப. ரவிசங்கர், பழமுதிர்ச்சோலை, ஆயார் கடவை, பிள்ளையார் கோயிலடி, பலாலி வீதி, புன்னாலைக்கட்டுவன் தெற்கு. (33262)

## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணை சிவன் கோயில் வடக்குவீதியில் உள்ள 86A இலக்க வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: திருமதி க. இராஜநாகேஸ்வரி "யோகஸ்தி", மானிப்பாய் தெற்கு, மானிப்பாய். (7950)

## கோழிக்குஞ்சு விற்பனை

ஒவ்வொரு செவ்வாயும் புதனும் நல்லின பிறிமா புறொயிலர் குஞ்சுகள் தனிச் சிவப்பு குஞ்சுகளும் விநியோகிக்கப்படும். 4 நாட்கள் வளர்ச்சியடைந்த புறொயிலர் குஞ்சு 42 ரூபா, பிளிமத் கறுப்பு வரிக் குஞ்சுகள் 30 ரூபா, தனிச்சிவப்பு குஞ்சுகள் 35 ரூபா. உடுவில் மகளிர் கல்லூரிக்கு முன், மல்வம் வீதி ஊடாக, சிங்கம் வீதி, உடுவில். (7666)

## மணமகன் தேவை

இந்து, 5-11-70 உத்திராடம் 1ஆம் பாதம், கன்னி ராசி உதயச் செவ்வாய் உள்ள அழகிய பெண்ணுக்கு ஆசிரியர், அரச உத்தியோகம் உள்ள மணமகன் தேவை. உடன் சமீபத்தில் எடுத்த புகைப்படம், ஜாதகத்துடன் தொடர்பு: "அபிராமி", துர்க்காதேவி தேவஸ்தான பின் வீதி, சாவகச்சேரி. (33244)

இந்து, 18-12-58, புரட்டாதி 4ஆம் பாதம், 6இல் செவ்வாயுள்ள B. A. டிப்ளோமா அழகான ஆசிரியைக்கு அரச உத்தியோகம், வங்கி, ஆசிரியர் மணமகன் தேவை. சமீபத்தில் எடுத்த புகைப்படம், ஜாதகத்துடன் தொடர்பு: "அபிராமி"; துர்க்காதேவி தேவஸ்தானம் பின் வீதி, சாவகச்சேரி. (33245)

இந்து, 25-9-60, விசாகம் 2ஆம் பாதம், 1இல் செவ்வாயுள்ள B.Sc. அழகான ஆசிரியைக்கு ஆசிரியர், அரச உத்தியோகம், வங்கி மணமகன் தேவை. தாரம் இழந்தவரும் விண்ணப்பிக்கலாம். ஜாதகம், சமீபத்தில் எடுத்த புகைப்படத்துடன் தொடர்பு: "அபிராமி", துர்க்காதேவி தேவஸ்தான பின் வீதி, சாவகச்சேரி. (33247)

இந்து, 14-06-62 சுவாதி 3ஆம் பாதம், 8இல் செவ்வாயுள்ள மனையியல் றெயினிங் ஆசிரியைக்கு வங்கி அல்லது ஆசிரியர் அரச உத்தியோகம் உள்ள மணமகன் தேவை. சமீபத்தில் எடுத்த புகைப்படம், ஜாதகத்துடன் தொடர்பு: "அபிராமி" திருமண சேவை, துர்க்காதேவி தேவஸ்தான பின் வீதி, சாவகச்சேரி. (33249)

இந்து, 15-01-62, பரணி 3ஆம் பாதம், 2இல் செவ்வாயுள்ள B. Sc. ஆசிரியைக்கு அரச உத்தியோகம், ஆசிரியர், வங்கி மணமகன் தேவை. ஜாதகம் புகைப்படம் உட்பட உடன் தொடர்பு: "அபிராமி", துர்க்காதேவி தேவஸ்தான பின் வீதி, சாவகச்சேரி. (33248)

இந்து 29-07-62, திருவாதிரை 2ஆம் பாதம், 11இல் செவ்வாயுள்ள அழகிய விஞ்ஞான பட்டதாரி ஆசிரியைக்கு தனியார், வங்கி ஆசிரியர் அரச உத்தியோகம் உள்ள மணமகன் தேவை. ஜாதகம் புகைப்படத்துடன் உடன் தொடர்பு: "அபிராமி", துர்க்காதேவி தேவஸ்தான பின் வீதி, சாவகச்சேரி. (33246)

## கலைஞர்கள் தேவை

பிரபல இசைக்குழுவுக்கு அனுபவம் பெற்ற பாடகர், தபேலா, லீட்-கிற்றார், பேஸ்-கிற்றார் இசைக்கலைஞர்களும் உதவியாளர்களும் தேவை. விபரங்களுக்கு 20-10-94ற்கு முன்னர் மாலை4-30—6-30க்கு இடையில் தொடர்பு கொள்ளவும்: இல. 61/1, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (33118)

## கடிகாரங்கள் திருத்தல்

உங்கள் மணிக்கூடுகள், றேடியோக்களை சிறந்த முறையில் திருத்திக் கொள்ளவும், உங்கள் பாவித்த மணிக்கூடுகளை உதிரிப்பாகங்களுக்காக விற்றுக் கொள்ளவும் நீங்கள் நாடவேண்டிய இடம் டில்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ், மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டை, கண்டி வீதி சாவகச்சேரி, தலைமையகம் 284, ஸ்ரான்லி வீதி, (ஆரியகுளம் சந்தி, வானவில் அருகில்), யாழ்ப்பாணம். (சி-9386)

## ஆங்கில வழிகாட்டி

யாழ். நகரிலுள்ள முன்னணிப் புத்தக நிலையங்களில் பெறலாம். G. C. E. O/L English Literature Notes on "Poetry" and 'Oliver Twist' by T. N. Punjaksharam விலை ரூபா 65/- Science Hall கன்னாதிட்டியிலும் கிடைக்கப் பெறும். (சி-9387)

## அனுமதிப் பரீட்சை

09-10-94 ஞாயிறு வெளியிடப்பட்ட பிரபல பாடசாலைகளுக்கான மாதிரி அனுமதித் தேர்வு வினாத்தாள்களைப் பெற்றுக்கொள்ளலாம். மாதிரி வகுப்புகளும் நடைபெறுகின்றன. புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (33264)

## மெஷின்மன் தேவை

பிளேட்டின் அச்சியந்திரத்தில் வேலை செய்வதற்கு அனுபவமுள்ள ஒரு மெஷின்மன் உடனே தேவை. பிளேட்டின் மெஷின் அச்சிடும் வேலை பழகுவதற்கும் ஒரு இளைஞர் தேவை. நேரில் வருக. ஆனந்தா அச்சகம், 226, காங்கேசன்துறைச் சாலை, யாழ்ப்பாணம். (சி-9400)

## நூலகர் தேவை

திருநெல்வேலியில் ஒரு பிரபல பெண்கள் நிறுவனத்தில் கடமையாற்ற நூலகவியல் கற்ற பெண் நூலகர் தேவை. உடனடியாக விண்ணப்பிக்கவும். கா. மாணிக்கவாசகர், யாழ். மத்திய கல்லூரி. (33241)

## பூச்சிக்கொல்லி

பூச்சிக்கொல்லி (இன்செக்ரிடஸ்ட்) மலத்தீனிலும் சிறந்தது. கறையான், எறும்பு, கொறவணன் போன்ற சகல பூச்சிகளையும் கட்டுப்படுத்த சிறந்தது. கண்ணன் ஸ்ரோஸ், மக்கள் வங்கி முன்பாக, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [சி-9389]

## மழைப் போர்வைகள்

மழைப் போர்வைகள் (Rain Coat) சகல கலர்களிலும் கிடைக்கும். அளவிற்கேற்ப தைத்தும் கொடுக்கப்படும். ராம்சன்ஸ், சுதுமலை வடக்கு, மானிப்பாய். (7952)

## மண்ணுக்கு உரம் ஊட்ட

மழை வந்தது. பூமித் தாயின் உள்ளம் குளிர்ந்தது. பூமித்தாய்க்குச் சக்தி இயற்கைப் பசளை, நீமியா (வேப்பம்) உரம் ஊட்டினால் அள்ளித்தருவாள். வளம் பெருக்குவாள். வயிற்றுப்பசி போக்குவாள். "சக்தி இயற்கைப்பசளை, நீமியா உரம் என்பன அண்ணா கோப்பிக் கடைகளிலும் விற்பனையாகிறது. 'மில்க்வைற்' [சி-9294]

பட்டப்பின் கல்வித் தகைமை கற்கை நெறி 1993/94

### அனுமதிக்கான நேர்முகப் பரீட்சை

பட்டப்பின் கல்வித் தகைமை அனுமதிப் பரீட்சையில் சித்தியடைந்த ஆசிரியர்களுக்கு 1994-10-20 ஆம் திகதி நேர்முகப் பரீட்சை நடைபெறும்.

நேர்முகப் பரீட்சை தொடர்பான கடிதங்கள் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன. இவர்களின் பெயர்ப் பட்டியல் பல்கலைக்கழக அறிவித்தற் பலகையில் போடப்பட்டுள்ளது.

நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளிக்கும் போது, பிறப்பு அத்தாட்சிப் பத்திரம், பட்டதாரிச் சான்றிதழ், நிரந்தர பட்டதாரி ஆசிரியருக்கான நியமனக் கடிதம் என்பன கொண்டு வரப்படல் வேண்டும்.

-பதிவாளர்.

யாழ். பல்கலைக்கழகம்.
1994 - 10 - 05
[சி-9292]

## மருந்தாளர் தேவை

புதிதாக ஆரம்பிக்கப்பட்ட மருந்தகத்திற்கு ஆண் மருந்தாளர் (Pharmacist) தேவை.

சான்றிதழுடன் விண்ணப்பிக்கவும்.

விநாயகர் மருந்தகர்,
305, பலாலி வீதி,
திருநெல்வேலி தெற்கு,
யாழ்ப்பாணம்.

(33268)

கும்பழாவளைப் பிள்ளையார் கோயில்

## ஜீர்ணோத்தாரண மகா கும்பாபிஷேகம் ஓர் வேண்டுகோள்

12 ஆண்டிற்கு ஒருமுறை செய்யப்பட வேண்டிய கும்பாபிஷேகம் ஆண்டுகள் 4கடந்த பின்பும் நிகழவில்லை.

விநாயகப் பெருமானின் திருவருள் ஜீர்ணோத்தாரண மகாகும்பாபிஷேகம் புரியத் துணைபுரிவதால் மேற்படி கும்பாபிஷேகத்திற்கான ஆலோசனைகளை (கட்டட அமைப்பு, மாற்றம் போன்றவை) இத்துறையிலே நிபுணத்துவம் வாய்ந்த பெரியோர்கள் ஆலய ஐதீகம் பிறழாத ஆகம சம்மதமான முறையிலே மிகவிரைவிற் தெரிவித்தருள வேண்டும் என்று பிரார்த்திக்கிறோம்.

செயலாளர்,
தர்மகர்த்தாக்கள் சபை,
கும்பழாவளைப் பிள்ளையார் கோயில்.
அளவெட்டி.

குறிப்பு:

உபயகாரர் பட்டியல் 22-10-1994 தொடக்கம் ஆலய அலுவலகத்தில் பார்வைக்கு வைக்கப்படும். வேண்டிய மாற்றங்களை அத்தாட்சியுடன் தெரியப்படுத்தி, ஆவன செய்யும்படி அன்பாகக் கேட்கிறோம்.

(33265)

---

நரசிம்மராவின் சிறப்புத் தூதர்

# வர்மாவுடன் நடத்தப்பட்ட பேச்சின் விவரங்களை ஏன் வெளியிடவில்லை?

## அரசாங்கத்திடம் காமினி கேள்வி

கொழும்பு, ஒக். 10
இந்தியப் பிரதமர் நரசிம்மராவின் சிறப்புத் தூதராக கொழும்பு வந்த திரு ஏ.என். வர்மாவுடன் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தையின் விவரங்களை இலங்கை அரசு இன்னும் ஏன் வெளியிடாதுள்ளது?

எதிர்க்கட்சித் தலைவர் காமினி திஸநாயக்கா இக்கேள்வியை கடந்த வாரம் நாடாளுமன்றத்தில் எழுப்பினார்.

சர்வதேச மயப்படுத்தப்பட்டுவிட்ட வடக்கு—கிழக்கு யுத்தம் தொடர்பாக தற்போதைய அரசு நடத்தி வரும் நாடகத்தை அனைவரும் விழிப்புடன் அவதானித்து வருகின்றனர். அவை தொடர்பாக சபைக்கு அறிவிக்க வேண்டியது அரசின் கடமையாகும் என்றும் அவர் கூறினார். (எ)

# அதிக பாதுகாப்பு வழங்குக! காமினி கோருகின்றார்

கொழும்பு, ஒக். 10
தமக்கு வழங்கப்பட்டு வரும் பாதுகாப்பை அதிகரிக்கும்படி எதிர்க்கட்சித் தலைவர் காமினி திஸநாயக்கா பாதுகாப்பு அமைச்சைக் கேட்டுள்ளார் என்று அறிவிக்கப்படுகிறது.

விடுதலைப்புலிகள் தம்மைக் கொல்லத் திட்டமிட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் பொலிஸ் மா அதிபர், நாட்டின் புலனாய்வு மற்றும் பாதுகாப்புக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபர்களுக்கும் முறையிட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை—
விடுதலைப்புலிகளின் கொலை அச்சுறுத்தலுக்கு மத்தியிலும் காமினி தமது தேர்தல் பிரசாரங்களை எவ்வித கட்டுப்பாடுமின்றி மேற்கொள்வார் என்று எதிர்க்கட்சித்தலைவரின் அலுவலகம் விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:- கொலை அச்சுறுத்தல் இருக்கின்ற போதிலும் நாட்டினதும் கட்சியினதும் நலன்களைக் கருத்தில் கொண்டு ஜனாதிபதித் தேர்தல் பிரசாரத்தை தங்குதடையின்றி மேற்கொள்ள காமினிதிஸநாயக்கா தீர்மானித்துள்ளார்.

தமது தனிப்பட்ட பாதுகாப்பைப் பலப்படுத்த மேலதிக வாகனங்களைத் தந்துதவும்படி அவர் பாதுகாப்பு அமைச்சரைக் கோரியுள்ளார்.
—இவ்வாறு அவ்வறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

கடந்த இரண்டு மாதங்களில்

# ஒரே ரகத் துப்பாக்கியால் வவுனியாவில்6பேர்கொலை

கொழும்பு, ஒக். 10
வவுனியாவில் ஆயுத படையினரின் கட்டுப்பாட்டுக்குள் உள்ள பகுதிகளில் கடந்த இரண்டு மாதங்களில் ஆறு பேர் இனந்தெரியாதவர்களினால் மர்மமான முறையில் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இக்கொலைகளுக்குப் பயன்படுத்தப்பட்ட கைத்துப்பாக்கிகள் ஒரே ரகத்தைச் சேர்ந்தவை என்றும் — இச்சம்பவங்கள் குறித்து தாம் கவலையடைந்திருப்பதாகவும் ஈ.பி.ஆர்.எல்.எவ் அமைப்பு விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

வடக்கு-கிழக்கிலும்

# அவசர காலச்சட்டம் நீக்கப்பட வேண்டும்

## வாசுதேவ வற்புறுத்து

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் தற்பொழுது அமுலில் இருக்கும் அவசரகால நிலை நீக்கப்பட வேண்டும் என்று தாம் வற்புறுத்தி வருவதாக இரத்தினபுரி மாவட்ட பொ. ஐ. மு. எம். பி. வாசுதேவ நாணயக்கார தெரிவித்திருக்கிறார்.

எனினும் தாம் அரசாங்கத்தின் பெரும்பான்மையைப் பாதுகாப்பதற்காகவே கடந்த வாரம் நாடாளுமன்றத்தில் அவசரகால நீடிப்புப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்ததாகவும் அவர் தெரிவித்தார்.

தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளும் தீர்வையே அரசாங்கம் முன்வைக்க வேண்டும் என்றும் அவர் கூறினார். (எ)

# சந்திரிகாவை ஆதரித்து மு. கா. தீவிர பிரசாரம்

## அரசியல் குழு முடிவு

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி வேட்பாளர் சந்திரிகாவை ஆதரித்துப் பிரசாரம் செய்வதென ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தீர்மானித்துள்ளது.

தேர்தல் பிரசாரத்தில் முக்கிய பங்கேற்பதெனவும் முஸ்லிம் காங்கிரஸின் அரசியல் குழு முடிவு செய்துள்ளது. அரசியல் குழுவின் கூட்டம் கடந்த வியாழன் இரவு இடம்பெற்றது. (எ)

# அரச சட்டத்தரணியை பொலீஸ்அதிபர் தாக்கினார்

## கொள்ளுப்பிட்டியில் சம்பவம்

அரச சட்டத்தரணி ஒருவரை பொலீஸ் அதிபர் ஒருவர் தாக்கிய சம்பவம் கொள்ளுப்பிட்டியில் இடம்பெற்றது.

சம்பவம் இடம்பெற்ற சமயம் சம்பந்தப்பட்ட பொலீஸ் அதிபர் குடிபோதையில் இருந்தார் என்று தெரிவிக்கப்படுகிறது.

அரச சட்டத்தரணிகள் சங்கம் இது தொடர்பாக பொலீஸ் மா அதிபர் பிராங்க் டி சில்வாவுக்கு முறையிட்டது. அதனை அடுத்து அந்த பொலீஸ் அதிபர் கட்டாய விடுமுறையில் அனுப்பப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-6)

# உடனடி யுத்த நிறுத்தம் கொண்டுவர வேண்டும்

## சட்டதரணிகள் அமைப்பு கோரிக்கை

கொழும்பு, ஒக். 10
மனித உரிமைகள் பேணல் தொடர்பான சட்டத்தரணிகள் அமைப்பு, வடக்கு— கிழக்கில் உடனடியாக யுத்த நிறுத்தம் கொண்டு வரப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளது.

இந்த அமைப்பின் நிறைவேற்றுக்குழு கடந்த முத[illegible] தொடர்பான தீர்மானம் [illegible]ளது.

"சமாதானத்தீர்வு காணும் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கவும்—

மனித துன்பங்களுக்கு முடிவு கட்டவும் உடனடியாக யுத்த நிறுத்தம் ஒன்றைப் பிரகடனம் செய்யும்படி இந்த அமைப்பு அரசாங்கத்தையும் விடுதலைப்புலிகள் இயக்கத்[illegible] "கோருகிறது"

இவ்வாறு அத்தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

## சரஸ்வதி பூஜை

யாழ்ப்பாணம், ஒக். 10
யாழ். மாவட்டச் செயலக நலன்புரிக் கழகத்தினால் நடத்தப்படும் சரஸ்வதி பூஜை நாளை செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு செயலக வளாகத்தினுள் இருக்கும் வேலணை பிரதேச செயலகம் இயங்கும் மண்டபத்தில் நடைபெறும்.

இதில் பண்ணிசைப் புலவர் திரு. வே. சிவஞானம் தலைமையில் நடைபெறும் பஜனையும், சிவஸ்ரீ கைலை வாமதேவக் குருக்களின் சமயச் சொற்பொழிவும் இடம்பெறும். (க-4)

## தவறவிட்ட கைப்பை

யாழ்ப்பாணம், ஒக் 10
பெறுமதி வாய்ந்த பொருள்களுடன் பெண்களின் கைப்பை ஒன்றை இரு சில்லூர்தி சேவையாளர்கள் கிளாலி பாதையில் கண்டெடுத்துள்ளனர். உரியவர்கள் தகுந்த ஆதாரம் காட்டி யாழ். மத்திய பஸ் நிலையத்தில் உள்ள இருசில்லூர்தி சேவைச் சங்க காரியாலயத்தில் அதனைப் பெற்றுக்கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## மட்டக்களப்பு அரச அதிபர் இடமாற்றம்

கொழும்பு, ஒக். 10
மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திரு. மோனகுருசாமி கொழும்புக்குத் திடீரென இடமாற்றப்பட்டுள்ளார்.

அவரது இடத்துக்கு புதிய அரச அதிபராக வடக்கு கிழக்கு மாகாண பிரதி பிரதம செயலாளர் ஏ. கே. பத்மநாதன் நியமிக்கப்பட்டிக்கிறார். (இ-ஐ)

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஒக். 10
ராசி பட்டுச்சோலை நிறுவனத்தின் ஆதரவில் நொதேண் வி. க. நடத்தும் — 'பரா' வெற்றிக் கிண்ணத்திற்கான — மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் அரையிறுதி ஆட்டங்கள் இன்று பிற்பகல் 3.00 மணி முதல் கனகரத்தினம் ம.ம.வி. மைதானத்தில் நடைபெறும்.

அன்னை வேளாங்கண்ணி அணியை எதிர்த்து நொதேண் வி. க. வெள்ளை அணியும்— றொபேர்ட் அணியை எதிர்த்து நொதேன் வி. க. பச்சை அணியும் மோதும். (உ)

## ஆலயங்களில்

யாழ். வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் கோயிலில் இன்று திங்கட்கிழமை இரவு 7.15 மணிக்கு திரு. ஆறு. திருமுருகனின் உற்சவகால சமய உரை இடம்பெறும். "திருப்பாவையும் திருவெம்பாவையும்" எனும் பொருளில் அவர் உரை நிகழ்த்துவார். (க-30)

## ஆசிரிய கலாசாலை பரீட்சைமுடிவுகள்

யாழ்ப்பாணம், ஒக். 10
கோப்பாய் ஆசிரிய கலாசாலை 93 ஆம் ஆண்டு பரீட்சை முடிவுகள் இன்று வெளியிடப்படவுள்ளன. இன்று [திங்கள்] நண்பகல் 12 மணிக்குப் பின்னர் ஆசிரியர்கள் தமது பெறுபேறுகளை அறிந்து கொள்ளலாம் என ஆசிரிய கலாசாலை அதிபர் தெரிவித்துள்ளார். (ஐ)

## திருமலையில் வீரச்சாவு

யாழ்ப்பாணம், ஒக். 10
திருமலை மாவட்டம் மூதூர் புத்துவெளி என்னுமிடத்தில் கடந்த புதனன்று படையினர் பதுங்கியிருந்து நடத்திய தாக்குதலில் போராளியான மேஜர் குன்றத்தூரான் அல்லது கோமளன் (கார்த்திகேசு விஜயரட்ணம் — திருமலை) என்பவர் வீரச்சாவடைந்தார். (ஜ-4)

## கமநலசேவை நிலையங்களில் தென்னங்கன்று

யாழ்ப்பாணம், ஒக். 10
கப்பல் மூலம் தருவித்து கமநல சேவை நிலையங்களில் நாற்றிடப்பட்ட 35 ஆயிரம் தென்னம் நாற்றுகளும் தற்போது நடுவதற்குரிய வளர்ச்சியை அடைந்துள்ளன. தென்னம்கன்றுகள் தேவையானோர் அடுத்தமாதம் முதல்வாரத்தில் இருந்து கமநலசேவை நிலையங்களில் அவற்றைப் பெற்றுக்கொள்ளலாம் என கமநல சேவைகள் திணைக்களத்தின் யாழ் மாவட்ட உதவி ஆணையாளர் திரு. க. சுந்தரேசன் தெரிவித்துள்ளார். (ஓ-4)

## சிரமதானவேலை

யாழ்ப்பாணம், ஒக். 10
செம்மணி இந்து மயான தெற்குப் பக்க நிலப்பரப்பில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி தொடக்கம் சிரமதான வேலை நடைபெறும். (க)

## பிரத்தியேக விலங்கியல்

★ மீட்டல் வகுப்பு ★

R. ஈஸ்வரதாசன்
B.Sc. (Cey.) Dip. In. Ed.

ஆரம்பம்:
11-10-94
செவ். 4 p.m.

SCIENCE COLLEGE
பெருமாள் கோவில் வீதி,
யாழ்.

(சி-9305)

## 19 ஆவது பிறந்தநாள் வாழ்த்து

செல்வன் சரவணபவன் தணிகைவாசன்
(சொர்க்கர்)

காரைநகர், புதுறோட்டை பிறப்பிடமாகவும் இல. 169/, கஸ்தூரியார் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட சரவணபவன் இராசம்மா தம்பதிகளின் கனிஷ்ட புதல்வன் செல்வன் சரவணபவன் தணிகைவாசன் (சொர்க்கர்) தனது 19 ஆவது பிறந்த தினத்தை இன்று (10-10-94) மிகவும் விமரிசையாக கொண்டாடுகின்றார். சொர்க்கத்தை கொழும்பிலுள்ள அப்பா, அம்மா, அண்ணா, தங்கை இங்குவசிக்கும் அக்கா, மாமாமார், மாமிமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், காரைநகரிலுள்ள தாத்தா, பாட்டி மற்றும் அன்பு நண்பர்கள் அனைவரும் கடவுள் அருளால் பல்கலைகளும் பெற்று பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

(33276) நண்பர்கள்.

யாழ். மத்திய கல்லூரியின்

## உதைபந்தாட்ட நூற்றாண்டு விழா

இன்றைய ஆட்டம்:

G.S. லிங்கநாதன்
ஆதரவில்

SKANDA vs J CENTRAL

(33273)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2 நாவலர் வீதி.
யாழ்ப்பாணம்.

## பேச்சுக்கு குந்தகம் வேண்டாம்

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கப் பிரதிநிதிகளுக்கும் இடையிலான ஆரம்பப் பேச்சுக்கள் இவ்வாரத்தில் நடைபெறவுள்ளன. இனப்பிரச்சினை விவகாரத்தில் கடந்த நான்கு வருடங்களின் பின்னர் உண்டாகியுள்ள பெரும் திருப்பமாகவே இவ்வாரத்துப் பேச்சுவார்த்தைகள் நோக்கப்படுகின்றன.

ஆனால், போர் முடிவுக்கு வருவதையும், இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டுத் தமிழ் மக்களுக்கு உரிமைகள் வழங்கப்படுவதையும் விரும்பாத தீய சக்திகள், பேச்சுவார்த்தைக்குக் குந்தகம் விளைவிக்க முயற்சிக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

இத்தகைய பின்னணியிலேயே, கத்தோலிக்கப் பேராயர் அதி. வண. நீக்கலஸ் மார்க்கஸ் பெர்னாண்டோ தாம் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில், பேச்சுக்கள் ஆரம்பமாகும் வேளையில் வடக்கிலும் தெற்கிலும் அமைதியைப் பேணுமாறு வேண்டுகோள் விடுத்திருக்கிறார். பேச்சுவார்த்தையை குழப்பிவிடக்கூடிய குந்தக நிலைமைகளுக்கு இடம்தர வேண்டாம் என்று கேட்டுள்ளார்.

தமிழர்கள் தமக்குச் சேர வேண்டிய உரிமைகளைத் தருமாறு கேட்கும் போதெல்லாம் அவர்களைத் தாக்கி வன்செயல்களைக் கட்டவிழ்த்து விடுவதும், இராணுவ அடக்குமுறையால் நசுக்குவதுமே தெற்கு அரசியல்வாதிகளின் நடைமுறையாக இருந்து வருகிறது. 1956ஆம் ஆண்டு தொடக்கம் தமிழர்களுக்கு எதிராக நடத்தப்பட்ட வன்செயல்கள் இதற்கு நல்ல உதாரணங்களாகும்.

தமிழர்களுக்குரிய உரிமைகளில் ஒரு சிலவற்றையேனும் வழங்குவதற்கு ஆட்சியில் உள்ளவர்கள் முன்வரும் போதெல்லாம், எதிரணியைச் சேர்ந்தவர்கள் அதனைக் குழப்புவதும் இந்நாட்டின் வழக்கமாகி விட்டது. பண்டாரநாயக்கா — செல்வநாயகம் ஒப்பந்தம், டட்லி — செல்வா ஒப்பந்தம் ஆகியன கிழித்தெறியப்பட்டதும், செயற்படுத்தப்படாமையும் இதற்கு நல்ல சான்றுகள்.

தென்னிலங்கை அரசியல்வாதிகளினதும், அவர்களின் பின்னால் நிற்கும் தீயசக்திகளினதும் இத்தகைய நடத்தையினாலேயே, இனப்பிரச்சினை விவகாரம் இந்தளவு பூதாகாரமாகி, நாட்டை மிக மோசமான நிலைக்கு, படுபாதாளத்துக்குத் தள்ளியிருக்கிறது.

இனப்பிரச்சினை நாட்டைச் சீரழிக்கும் ஒரு ''வைரஸ்'' கிருமியாக உருவெடுத்துவிட்ட போதிலும், அது குறித்துச் சிறிதும் கவலையில்லாதவர்களாக, தமிழர்கள் சம உரிமையுள்ள பிரஜைகளாக வாழ அனுமதிக்கக்கூடாது என்பதனை மட்டுமே முன்னிறுத்தி தீய சக்திகள் செயற்படுகின்றன.

இலங்கை அரசியலில் பெரும் திருப்பமாக அமைந்துள்ள விடுதலைப் புலிகள் — அரசு பேச்சைத் தடுப்பதற்கு இராணுவத்திற்குள் உள்ள சக்திகளும், வெளியே உள்ள தீயசக்திகளும் கைகோர்த்து நின்று கூட்டுச்சதியில் ஈடுபடும் சாத்தியமும் நிறையவும் உண்டு. இந்தச் சக்திகள் தாம் பின்னுக்கு, திரைமறைவில், நின்றுகொண்டு சிங்கள மக்களைத் தூண்டிவிடவும் தயங்கமாட்டா.

இராணுவத்தில் உள்ள பிற்போக்குச் சக்திகள் பேச்சுவார்த்தையைக் குழப்பும் எந்தவிதச் செயற்பாட்டிலும் இறங்காமலிருப்பதனைப் பார்த்துக் கொள்ளும் பொறுப்பு முப்படைத் தளபதிகளையே சாரும். இராணுவத்துக்குள், சமரசப் பேச்சுக்கு எதிரானவர்கள் என்று கருதப்படுவோரை இனங்கண்டு அவர்களைக் கண்காணிக்க வேண்டும். [illegible]

சமாதானத்தை உருவாக்கும் பணியை முன்னெடுக்கக் கூடிய பேச்சுவார்த்தைகள், எவ்வித இடையூறுமின்றி நடப்பதனை அரசாங்கமும், விடுதலைப் புலிகளும் மட்டும் உறுதிப்படுத்தினால் போதாது. மக்களும், இராணுவத் தலைமையினரும் அதனை உத்தரவாதப்படுத்த வேண்டும். அதற்கேற்றவாறு அவர்கள் செயற்பட வேண்டும்.

---

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில்

# நிராகரிக்கப்பட்டவர்களை மீண்டும் ஏற்றுக்கொள்ள மக்கள் தயார் இல்லை

## ஜனாதிபதி தேர்தல் நிலைவரம் பற்றி விக்ரர் ஐவன்

கொழும்பு, ஒக். 10

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தம்மால் நிராகரிக்கப்பட்டவர்களை எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஏற்றுக்கொள்வதற்கு வாக்காளர்கள் தயாராக இல்லை.

ராவய ஆசிரிர் விக்ரர் ஐவன் தமது அரசியல் கண்ணோட்டத்தில் முன்கண்டவாறு தெரிவித்தார்.

ஆட்சிக்கு வந்த ஒரு மாத காலத்தினுள் அரசு சில அடிப்படை அம்சங்களுக்குத் தேவையான சட்டங்களை தயாரித்திருப்பது குறித்து மக்கள் திருப்தி அடைந்துள்ளனர்.

ஜனாதிபதித் தேர்தலில் பொ. ஐ. மு. வெற்றி பெறுவது நிச்சயம். ஆயினும் வெற்றியின் அளவின் மீதே அவர்கள் குறிக்கோளாயுள்ளனர்.

பொதுத் தேர்தலில் மலையகத்தில் ஐ. தே. க. பெற்ற வெற்றிக்கு தொண்டமான் காரணமாயிருந்தார். ஆனால் ஜனாதிபதித் தேர்தலில் அவர் ஐ. தே. கவுக்கு ஆதரவளிப்பார் எனத் தென்படவில்லை. ஐ. தே. கவுக்கு அவர் ஆதரவளித்தாலும் மலையகத் தமிழ் மக்கள் ஐ. தே. கவுக்கு ஆதரவளிப்பர் என கருத முடியாது, எனவே பொ. ஐ. முன்னணி தேர்தலில் பெரு வெற்றியீட்டக் கூடும் எனத் தெரிகிறது

இவ்வாறு விக்ரர் ஐவன் மேலும் தெரிவித்தார்

(ஐ-6)

---

## வெடி விபத்தில் போராளி வீரச்சாவு

யாழ்ப்பாணம், ஒக். 10

யாழ். மாவட்டத்தில் நேற்று முன்தினம் ஏற்பட்ட வெடிவிபத்து ஒன்றில் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளியான 2 ஆம் லெப்டினன்ட் காந்தரூபன் அல்லது குலேந்திரன் (செல்வராசா தவநேசன் — 2 ஆம் வட்டாரம், புங்குடுதீவு) என்பவர் வீரச்சாவடைந்தார்.

(ஐ-4)

## பதவி உயர்வு

தென்மராட்சி, ஒக். 10

தென்மராட்சி பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் ஏழு கிராம அலுவலர்கள் தரம் ஒன்றுக்கு தகுதி பெற்றுள்ளதாக வடக்கு-கிழக்கு மாகாண பொது நிர்வாக பிரதிப் பிரதம செயலாளர் அ.ச. பத்மநாதன் அறிவித்துள்ளார்.

(எ-117)

---

## ஜே. ஆரின் பாதுகாப்புக்கு நவீனசினைப்பர்ரைபிள்கள்

கொழும்பு, ஒக். 10

முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் பாதுகாப்புக்கென எட்டு நவீன ''லேசர் சினைப்பர் ரைபிள்கள்'' இறக்குமதி செய்யப்படவுள்ளதாக ''திவயின'' நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

மிகத் தொலைவில் இருந்து இலக்குகளைத் தாக்கக் கூடிய இந்த துப்பாக்கிகளின் பெறுமதி 35 லட்சம் ரூபாவாகும்.

பின்லாந்து நாட்டில் உள்ள ''சாகோ'' என்ற நிறுவனத்திடமிருந்து இந்தத் துப்பாக்கிகளை வாங்குவதற்கு பொலீஸ் தலைமை அலுவலகம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

இந்தத் துப்பாக்கிகளுக்கு விசேடமாகப் பொருத்தப்படும் ''லேசர் பைன்டர்'' கருவிகளும் இதற்கென பிரத்தியேகமாக 2 லட்சத்து 40 ஆயிரத்து நானூறு ரூபா செலவில் கொள்வனவு செய்யப்படும்.

மேற்படி துப்பாக்கிகள் கொள்வனவிற்கு சுங்கத்தீர்வை விலக்கு அளிக்கப்பட்டிருப்பதாகவும் ''திவயின'' செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-9)

---

முதன் முறையாக

# எம். பியாக தெரிவானோர் புதியவாகனங்கள்பெறலாம்

## ஏனையோருக்கு கிடையா

கொழும்பு, ஒக். 10

முதல் தடவையாக எம். பிக்களாகத் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கே புதிய வாகனங்களை ஒதுக்குவது என்று அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

கடந்த பொதுத்தேர்தலில் மீண்டும் தெரிவான எம். பிக்களுக்கு புதிய வாகனங்களை ஒதுக்குவதில்லை என்றும் அரசு தீர்மானித்துள்ளது.

மீண்டும் தெரிவான எம். பிக்கள் கடந்த ஆட்சிக் காலத்தில் வாங்கிய வாகனங்களையே தொடர்ந்து பயன்படுத்த வேண்டும் என்றும் அரசு அறிவித்துள்ளது.

அரசின் இந்த முடிவு மீண்டும் எம். பிக்களாகத் தெரிவு செய்யப்பட்டவர்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது என்று கூறப்படுகிறது.

தாங்கள் பாவித்து வரும் வாகனங்களை ஐந்து ஆண்டு காலம் பாவிக்கப்பட்டவை என்றும் —

அவைகள் பழுதான நிலையில் உள்ளன என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

(எ)

---

## வடக்கு- கிழக்கு பிரச்சினைக்கு

# நிரந்தரத் தீர்வு கண்டதும் படையினர் அகன்று விடுவர்

## மட்டுநகர் பிரிகேடியர் தகவல்

கொழும்பு, ஒக். 10

வடக்கு- கிழக்கு பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணப்பட்டவுடன் படையினர் இங்கிருந்து அகன்று சென்று விடுவர்.

மட்டக்களப்பு மாவட்ட பாதுகாப்பு இணைப்பதிகாரி பிரிகேடியர் நிஹால் ஜெயக்கொடி தெரிவித்தார்.

படையினர் கிழக்கில் நிரந்தரமாக நிலை கொள்ளக் கூடியதாக எந்த முகாமும் அமைக்கப்படவில்லை என்றும் அவர் கூறினார்.

தம்மைச் சந்தித்த மட்டக்களப்பு மாநகரசபைத் தூதுக் குழுவிடம் அவர் முன்கண்டவாறு தெரிவித்தார்.

(எ)

## முதலாவது இடம்

யாழ்ப்பாணம், ஒக். 10

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் நல்லூர்க் கண்காட்சியிலே ''மனங்கவர்ந்த காட்சியகத் தெரிவுப் போட்டி'' நடைபெற்றது தெரிந்ததே. இப் போட்டியில் கைத்தொழில் பகுதிக் காட்சியகம் முதலாம் இடத்தைப் பெற்றது.

---

பிரேமதாஸாவின் சிலைக்கு

# காமினி மாலை சூட்டியது கண்டு பரவசமடைந்தேன்

## சுசரித்த கூட்டத்தில் ஹேமா

கொழும்பு, ஒக். 10

பிரேமதாஸாவின் சிலைக்கு மலர்மாலை அணிவித்து, ஜனாதிபதித்தேர்தலில் வெற்றியீட்டுவதற்காக அவரிடம் காமினி திஸநாயக்கா ஆசி கோரிய நிகழ்ச்சியைப் பார்த்து நான் பரவசமடைந்தேன்.

ஹேமா பிரேமதாஸா சுசரித்த மண்டபத்தில் நடந்த கொழும்பு மத்தி ஐ. தே. க. கூட்டத்தில் பேசுகையில் முன்கண்டவாறு தெரிவித்தார்.

இக் கூட்டத்தில் காமினி திஸநாயக்காவும் கலந்து கொண்டார்.

காமினிக்கும் தமது கணவர் பிரேமாவுக்கும் இடையே கருத்து வேறுபாடு இருந்தது என்பது உண்மையே என்றும்—

கடந்த கால சம்பவங்களை மறந்து எதிர்கால நடவடிக்கைகளை அமைத்துக் கொள்ள வேண்டும் என்றும் ஹேமா தெரிவித்தார்.

காமினி திஸநாயக்காவும் பேசினார்.

(எ)

---

## வடபகுதி படையினரிடம்

# செயல் இழந்த நிலையில் தொடர்பு சாதனங்கள்

## பிரதி அமைச்சரிடம் முறையீடு

கொழும்பு, ஒக். 10

வடபகுதியில் நிலை கொண்டுள்ள ஆயுதப் படையினர் தங்களுக்கு இடையே தொலைத்தொடர்புகளை பராமரிப்பதற்கு பயன்படுத்தி வரும் 'ஐகொம்செற்' என்ற தொடர்பு சாதனங்கள், அவற்றின் ஆயுட்காலம் முடிவடைந்து விட்டதனால் செயலிழந்து உள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள்காட்டி 'திவயின' சிங்கள நாளிதழ் இச்செய்தியை வெளியிட்டிருக்கிறது.

'ஐகொம்செற்' தொடர்பு சாதனத்தின் மொத்த ஆயுட்காலம் இரண்டு ஆண்டுகளாகும். ஆனால் இச்சாதனங்களை வடபகுதியில் நிலை கொண்டுள்ள படையினர் கடந்த நான்கு ஆண்டுகளுக்கு மேலாகப் பயன்படுத்தி வருகின்றனர். இதன் காரணமாக இவை சரியான இயக்கத்தை இழந்து விட்டன.

இது வடக்கில் உள்ள படையினர் தொலைத்தொடர்பு வசதிகளை மேற்கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளதாகவும் —

இது பற்றி அண்மையில் வடபகுதி முகாம்களுக்கு விஜயம் செய்தபோது பாதுகாப்பு பிரதி அமைச்சரிடம் நேரில் தெரிவிக்கப்பட்டதாகவும் அச்செய்தியில் குறிப்பிடப்பட்டுளளது.

(எ-9)

## காமினிக்கு முஸ்லிம் லீக் ஆதரவு

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஐ. தே. க வேட்பாளர் காமினி திஸநாயக்காவை ஆதரிப்பதென அகில இலங்கை முஸ்லிம் லீக் ஏகமனதாகத் தீர்மானித்தது.

முஸ்லிம் லீக் செயற்குழு அண்மையில் கூடி இம் முடிவை எடுத்தது.

(எ)

---

ஜனாதிபதித் தேர்தல்:

# தபால் மூல வாக்களிப்பு ஒக். 15 வரை கால நீடிப்பு

கொழும்பு, ஒக். 10

ஜனாதிபதித் தேர்தலுக்கு தபால் மூலம் வாக்களிப்பதற்கான விண்ணப்பங்களைப் பெற்றுக் கொள்வதற்கான இறுதி நாள் இம் மாதம் 15 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. யாழ். தேர்தல் மாவட்ட தபால் மூலம் வாக்களிப்போருக்கும் இந்தக் காலக்கெடு பொருந்தும் என்று தேர்தல் ஆணையாளர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்துக்குத் தபால்கள் போய்ச் சேர்வதில் ஏற்படும் காலதாமதத்தைக் கருத்தில் கொண்டு கொழும்பு மாவட்ட செயலகத்தில் இத்தகைய விண்ணப்பங்களைச் சேகரித்து இறுதித் திகதிக்கு முன்னர் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைக்க ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

---

தஞ்சாவூர் தமிழாராய்ச்சி மாநாடு:

# ஜனாதிபதி, பிரதமருக்கு ஜெயலலிதா அழைப்பு

புதுடில்லி, ஒக். 10

தஞ்சாவூரில் அடுத்த ஆண்டு ஜனவரியில் நடைபெறவுள்ள எட்டாவது தமிழாராய்ச்சி மாநாட்டில் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொள்ளுமாறு இந்திய ஜனாதிபதி டாக்டர் சங்கர் தயாள்சர்மா, பிரதமர் திரு. பி. வி. நரசிம்மராவ் ஆகியோருக்கு முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா நேரில் சென்று அழைப்பு விடுத்துள்ளார்.

மாநாட்டில் தாம் கலந்து கொள்வதாக அவர்கள் இருவரும் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவுக்கு உறுதிமொழி அளித்துள்ளனர்.

அடுத்த ஆண்டு ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் 5ஆம்திகதி வரை தஞ்சாவூரில் இந்த மாநாடு நடைபெறும்.

(இ-ஐ)

---

# தேர்தல் கொலைகள்: விசாரிக்க ஆணைக்குழு

கொழும்பு, ஒக். 10

பொதுத் தேர்தலின் போதும் அதன் பின்னரும் இடம்பெற்ற வன்செயல்களின் போதும் கொல்லப்பட்ட 25 பேர் தொடர்பாக விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிப்பதற்கென ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர் ரி. ஏ. டி. எஸ். விஜேசுந்தர தலைமையில் ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

(இ-ஐ-6)

---

# கால்நடை வளர்ப்போருக்கு பிரிவுரீதியாக பயிற்சிவகுப்பு

யாழ்ப்பாணம், ஒக். 10

கால்நடை வளர்ப்போரின் தொழில்நுட்ப அறிவை மேம்படுத்தும் நோக்குடன் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமும், கால்நடை சுகாதார உற்பத்தி திணைக்களமும் போதனாசிரியர் பிரிவு ரீதியாக கால்நடை வளர்ப்போர்க்கான பயிற்சி வகுப்புகளை நடத்தி வருகின்றன.

கடந்த மாதம் யாழ். குடாநாட்டில் 27 பயிற்சி வகுப்புக்கள் நடத்தப்பட்டன. சாவகச்சேரி, பருத்தித்துறை, வட்டுக்கோட்டை சங்கானை ஆகிய இடங்களில் இவ்வகுப்புகள் நடத்தப்பட்டன.

பெருமளவான பயிலுனர்கள் பங்கு கொண்ட இவ் வகுப்புக்களில் செயற்கை முறைச் சினைப்படுத்தல், நல்லின புல்வளர்ப்பு, ஆடு, மாடு வளர்ப்பு, கோழிகளுக்கு தடுப்பூசி ஏற்றுதல் ஆகிய பயிற்சிகள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(எ)

---

# தேச நிர்மாணிகளால் விசுவமடுகுளம்புனரமைப்பு

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள விசுவமடுக்குள புனரமைப்பு வேலைகள் தற்போது தேசநிர்மாணிகளால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சுமார் 2 ஆயிரத்து 900 ஏக்கர் அடி நீரைத் தேக்கி வைக்கக்கூடிய இக் குளம் கடந்த வருட இறுதிப் பகுதியில் பெய்த பெருமழைகாரணமாக அரிப்புக்குள்ளாகி சிதைவடைந்திருந்தது.

நீர்ப்பாசன திணைக்கள நிதியில் துரித நீர்வள மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வரும் இப்புனரமைப்பு வேலைகள் முடிவடைவதை அடுத்து எதிர்வரும் காலபோகத்தில் இக்குளத்தின் கீழ் 386 ஏக்கரில் பயிர்ச்செய்கை மேற்கொள்ளக் கூடியதாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

(எ)

---

# சைவ சமயப் போட்டிகள் புதனன்று நடைபெறும்

யாழ்ப்பாணம், ஒக். 10

யாழ்ப்பாணம் வலயம் 1 இற்கு உட்பட்ட அனைத்துப் பள்ளிமாணாக்கர்களுக்கும் இடையிலான இவ்வாண்டுக்குரிய சைவ சமயச்செயற்பாடுகளுள் அடங்கும் பண்ணிசை போட்டி, புராண படனப்போட்டி, குமரகுருபரரின் சகலகலாவல்லிமாலை விருத்தப்பா ஓதுதல் போட்டி ஆகியனவற்றின் வலய நிலை இறுதிப் போட்டிகள் எதிர்வரும் புதன்கிழமை யாழ்ப்பாணம் கனகரத்தினம் ம. ம. வி இல் நடைபெறவுள்ளன.

சாவகச்சேரி, நல்லூர், யாழ்ப்பாணம், வேலணை, ஊர்காவற்றுறைக் கோட்டங்களில் முதலாமிடம் பெற்ற நிகழ்ச்சிகளிற் போட்டியிடும் சுமார் ஆயிரம் மாணாக்கர் இதிலே கலந்துகொள்ளவுள்ளனர் எனக் கல்வித்திணைக்களக்குறிப்பொன்று தெரிவிக்கிறது.

(எ-4)

---

## புலிகளின் குரல் வானொலியில்

10 — 10 — 1994

திங்கள் இரவு

- ★ 8-01 — தளிர்கள் — சிறுவர்களுக்கான நிகழ்ச்சி
- ★ 8-20 — தாயகப்பாடல்கள்
- ★ 8-30 — செய்திகள்
- ★ 8-40 — ''புலிகளுடனான இந்தியப் படைகளின் போர் ஆரம்பம்.'' ''2 ஆம் லெப்டினன்ட் மாலதி'' என்பன நினைவாக சிறப்பு நிகழ்ச்சி — அச்சுநகர் பானுஷாந்தன் எழுதிய ''இந்தியப்போரில் சரித்திரமாகியவர்கள்''

11— 10 — 1994

செவ்வாய் காலை

- ★ 7-02 — மாவீரவணக்கம்
- ★ 7-15 — இன்றைய தாரகை
- ★ 7-30 — செய்திகள்
- 7-35 — பத்திரிகைச் செய்திகள்
- ★ 7-40 — தாயகப்பாடல்கள்.

---

# தமிழீழ வளங்களை இனங்காணும் புள்ளி விவரங்களை திரட்டும் பணி

## பொருண்மிய நிறுவனம் நடத்துகிறது

யாழ்ப்பாணம், ஒக். 10

தமிழீழ வளங்களை இனங்காணும் தொடர் முயற்சியின் செயற்பாடாக கால் நடைகள், வளர்ப்புப் பறவைகள், நிரந்தர, ஓரளவு நிரந்தரப் பயிர்கள், குடிற்றொழிலாளர்கள் போன்றவை தொடர்பான புள்ளிவிவரங்கள் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன புள்ளி விவரக்கிளையினரால் தற்போது திரட்டப்பட்டு வருகின்றன.

இந்நடவடிக்கையின் முதற் கட்டமாக தற்போது யாழ். மாவட்டத்தில் ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவாக அதற்கென பயிற்றப்பட்ட பயிற்சியாளர்கள் மூலம் படிவங்கள் விநியோகிக்கப்பட்டு தகவல்கள் சேகரிக்கப்படுகின்றன.

இதனைத் தொடர்ந்து கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வன்னி ஆகிய இடங்களிலும் இத்தகவல் திரட்டல் வேலைகளை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. இவ்வாறான தகவல் திரட்டும் வேலைகளில் ஈடுபட்டு வரும் கிராமிய தகவல் சேகரிப்பாளர்களுக்கு சரியான தகவல்களை வழங்கி ஒத்துழைக்குமாறு த. பொ. மே. நிறுவன புள்ளிவிவரக் கிளையினர் கேட்டுள்ளனர்.

[எ]

---

ஹேமா மேடையில் ஏறிய மறுகணம்

# பிரேமா பற்றி காமினி கூறியதை எல்லாம் வெளியிடப்போவதாக ரணசிங்க அறிவிப்பு

கொழும்பு, ஒக். 10

மறைந்த ஜனாதிபதி பிரேமதாஸா பற்றி காமினி திஸநாயக்கா கூறியவற்றை எல்லாம் வெளியிடத் தாம் தயாராக இருப்பதாக, ஜனாதிபதித் தேர்தலில் சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிடும் ஏ. ஜே. ரணசிங்க தெரிவித்திருக்கிறார்.

காமினிக்கு ஆதரவாக ஹேமா மேடையில் ஏறிப் பிரசாரம் செய்ய ஆரம்பித்த மறுகணம் தாம் உள்ளூர் [illegible] அழைத்து, பிரேமதாஸாவைத் தாக்கிப் பேசியது தொடர்பாக ஒலிப்பதிவு நாடாக்களை வெளியிடப் போவதாக திரு. ரணசிங்கா பயமுறுத்தியுள்ளார்.

''சம்பந்தப்பட்ட ஒலிப்பதிவு நாடாக்களை வெளியிட வைப்பதன் மூலம் என்னை ஒரு பாவியாக மாற்றிவிட வேண்டாம்'' — என்றும் அவர் ஹேமாவைக் கேட்டுள்ளார்.

''தமது கணவர் குறித்து திஸநாயக்கா மோசமான குற்றச்சாட்டுகளை எல்லாம் சுமத்திய பின்னர் எப்படி ஹேமா காமினியை ஆதரிக்க முடிவு செய்தார் என்பது எனக்கு அதிர்ச்சியைத் தருகின்றது'' — என்றும் அவர் கூறினார்.

பிரேமதாஸாவின் சுசரித்த வாசஸ்தலத்துக்கு காமினி விஜயம் செய்த சம்பவம் பற்றி கருத்து வெளியிடுகையில் —

''இந்த விஜயம் பற்றி என்னால் கற்பனை செய்து பார்க்கவே முடியவில்லை'' — என்று திரு. ரணசிங்கா தெரிவித்தார்.

பிரேமதாஸாவின் நெருங்கிய ஆதரவாளர்களின் ஆதரவு தமக்கு இருப்பதாகக் கூறும் இவர், அவர்களின் பெயர்களை தற்போது வெளியிட முடியாது என்றும் கூறினார்.

(எ)

---

இயற்கை எம் உடைமை - அதைக் காப்பது எம் கடமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழீழ பொதுத் தேர்வுகள் அடுத்த மாதம் நடைபெறும்

யாழ்ப்பாணம் ஒக். 10 தமிழீழ முதனிலை இளநிலைப் பொதுத் தேர்வுகள் அடுத்த மாதம் நடைபெறவுள்ளன. ஆண்டு 5 மற்றும் ஆண்டு 8 வகுப்பு மாணவர்களுக்கு இந்தத்தேர்வு நடத்தப்படும்.

அடுத்த மாதம் 4 ஆம் திகதி முதல் 9 திகதி வரை எழுத்துத் தேர்வும்—, 10ஆம் திகதியும் 11 ஆம் திகதியும் விஞ்ஞான பாடச் செயன்முறைத் தேர்வும் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சங்கீதம், நடனம், வாழ்க்கைத்திறன் மற்றும் தொழில் நுட்பப் பாடம் ஆகியனவற்றின் தேர்வினை ஏற்கனவே திட்டமிட்டபடி நடத்தி முடிக்க ஒத்துழைக்குமாறும் தமிழீழக் கல்வித் தேர்வு ஆணையாளர் கேட்டுள்ளார்.

## ஜனாதிபதி தேர்தல் பிரசாரத்துக்கு

# அரச வாகனங்களை பயன்படுத்தத் தடை

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் பிரசாரத்தின் போது அரச வாகனங்கள் பயன்படுத்தப்படக்கூடாது என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

இந்த உத்தரவு அமைச்சுகள் மற்றும் திணைக்களங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

கடந்த பொதுத்தேர்தலின் போது அமைச்சுகள் திணைக்களங்களுக்குரிய வாகனங்கள் தேர்தல் பிரசாரங்களுக்கு பயன்படுத்தப்பட்டிருந்தன.

இது ஒரு தேர்தல் ஒழுங்கீனம் என்று பொதுத் தேர்தலை அவதானித்த சர்வதேச கண்காணிப்புக் குழு குறை கூறியிருந்தது.

கடந்த பொதுத் தேர்தல் பிரசாரங்களில் பயன்படுத்தப்பட்ட பல அரச வாகனங்கள் தற்போது பழுதடைந்தநிலையில் உள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-எ)

## மரண அறிவித்தல்கள்

### கந்தையா குமார்
### (லெப். கௌசலன் / செம்மலை)

காரைநகர் களவிலிப்பிட்டியை பிறப்பிடமாகவும், திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வன் க. குமார் 25 – 09 – 94 அன்று வீரச்சாவை தழுவிக் கொண்டார்.

இன்று திங்கட்கிழமை காலை 8மணிக்கு அன்னாரது நினைவாக அவரது திருவுருவப் படம் வைத்து நினைவு கூரும்நிகழ்வு இடம்பெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
திருமதி க. பத்மாவதி,
க. பத்மன்,

மடம் ஒழுங்கை,
திருநெல்வேலி வடக்கு,
யாழ்ப்பாணம். (33267)

### மாணிக்கவாசகர் கந்தசாமி

(சங்கானை சந்தை – கயிற்றுக் கடை உரிமையாளர்)

சங்கானை தேவாலய வீதியைப் பிறப்பிடமாகக் கொண்ட மா. கந்தசாமி 7–10–94 வெள்ளிக்கிழமை கொழும்பு மருத்துவமனையில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற ச. மாணிக்கவாசகரதும், திருமதி மகேஸ்வரியினதும் அன்பு மகனும், நாரந்தனை வடக்கு ''விஷகடி வைத்தியர்'' கதிரவேலு தியாகராசா, காலஞ்சென்ற திருமதி பாக்கியம் அவர்களின் மூன்றாவது மருமகனும், புஸ்பரதியின் (மேனகா) அன்புக் கணவரும், லக்ஷன் (யாழ். இந்து ஆரம்பபாடசாலை ஆண்டு 4 A), தியக்ஷன் ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், சரோஜினிதேவி (இத்தாலி), விஜயகுமார் (செல்வராஜா ஸ்ரோஸ் — உடுவில்), காலஞ்சென்ற மல்லிகாதேவி, கமலாதேவி, சுசிலாதேவி, சிவகுமாரி, சிவசுந்தரமூர்த்தி (கனடா), ஜெயக்குமாரி (கனடா) ஆகியோரின் சகோதரனும், இரத்தினபாலசிங்கம் (பிரான்ஸ்), தியாகராஜா (முன்னாள் வெலிசுமராஜா — ஸ்ரோஸ் உரிமையாளர்), தருமராசா (மானிப்பாய் M.P.C.S.), பாலசுப்பிரமணியம், யோகேஸ்வரன் (கொழும்பு), தெய்வேந்திரம்(கனடா), நாகேஸ்வரி, பாலசரஸ்வதி (கனடா), திருமதி பெரியதம்பி – விமலாதேவி, திருமதி சோமசுந்தரம் சற்குணதேவி (ஜேர்மனி), தில்லைச்சிவன் (லண்டன்), விஜயகாந்தன் ஆகியோரின் அருமை மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (10–10–94) இன்று திங்கட்கிழமை மாலை 4.00 மணிக்கு கொழும்பு, கனத்தை பொது மயானத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் தயவு செய்து ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க. தியாகராசா (மாமனார்)
(விஷகடி வைத்தியர்)
மா. விஜயகுமார் (சகோதரன்)

தேவாலய வீதி,
(முரளி வீதி)
சங்கானை. (33275)

பொறியியலாளர்கள், தொழில்நுட்பவியலாளர்களுடன்

# விமானம் மூலம் யாழ். எடுத்து வர ஜெனரேட்டர்கள் தயார் நிலையில்!

கொழும்பு, ஒக். 10 விமானம் மூலம் யாழ்ப்பாணத்துக்குக் கொண்டுபோய் இறக்குவதற்குத் தயாராக ஜெனரேட்டர்கள் வைக்கப்பட்டுள்ளன. பொறியியலாளர்கள், தொழில்நுட்பவியலாளர்கள் ஆகியோரும் தயார் நிலையில் உள்ளனர்.

இலங்கை மின்சார சபைத் தலைவர் டாக்டர் லெஸ்லி ஹேரத் இத்தகவலைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எதிர்வரும் வியாழன் வெள்ளி ஆகிய தினங்களில் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ள பூர்வாங்கப் பேச்சுக்களின் போது குடாநாட்டுக்கு மின் விநியோகம் வழங்கும் விஷயத்துக்கு முன்னுரிமைப் பட்டியலில் முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது.

அரசின் உத்தரவு கிடைத்ததும் சில மணித்தியாலங்களில் — நாட்கள் அல்ல — வடக்கிற்கு மின்சாரம் வழங்குவோம்.

பொறியியலாளர்கள், தொழில் நுட்பவியலாளர்களுடன் ஜெனரேட்டர்கள் விமானமூலம் கொண்டுபோய் யாழ்ப்பாணத்தில் இறக்க தயார் நிலையில் உள்ளன. முழு அளவிலான மின் விநியோகம் வழங்கக் காலம் எடுப்பினும், நான்கு மாதங்களுக்குள் முழு அளவிலான விநியோகம் வழங்கப்பட்டுவிடும். அதற்கேற்ற விதத்தில் திட்டங்களை மின்சாரசபை தயாரித்துள்ளது.

''சுன்னாகம் மின்நிலையத்தைத் திருத்துவது பொருளாதார ரீதியில் சாத்தியமல்ல, அங்குள்ள இயந்திராதிகளை இயங்க வைக்கலாம் என்று எமது பொறியியலாளர்கள் கூறுகின்றார்கள்; ஆனால் அது பிரச்சினைக்கான பதில் அல்ல. சந்தேகமின்றி விரைவில் சுன்னாகம் மின் நிலையம் மீண்டும் பழுதடையும். அங்குள்ள 33 வருடகால இயந்திரத்துக்குப் பதிலாக புதிய ஒன்றைப் பொருத்துவதே சரியான நடவடிக்கையாக இருக்கும்'' — இவ்வாறு அவர் மேலும் கூறினார். (உ-எ)

### மாலதி....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஒக்டோபர் மாதம் 10 ஆம் திகதி கோப்பாய் — கைதடி வீதியில் கோப்பாயை நோக்கி முன்னேறிய இந்தியப்படையினருடன் நடந்த மோதலில் மாலதி வீரச்சாவடைந்தார். (ஐ)

### தமிழீழ...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ருந்தும் அதன் படைகளிடமிருந்தும் காப்பேன் என்று கூறிக்கொண்டு இந்திய இராணுவம் இங்கே நுழைந்தது. 'மக்களைக் காப்பேன்' என்று சொல்லிய அதே படைகள் மக்களைக் கொன்றொழிக்கத் தொடங்கின, எமது வீரர்களை, தனது ஏமாற்று நாடகத்தால் கைது செய்து, சிறீலங்கா அரசுடம் ஒப்படைக்க முனைந்தன. எமது வீரர்கள் எதிரியிடம் உயிருடன் பிடிபடக்கூடாது என்ற இயக்க மரபுக்கிணங்க தம்மையே அழித்ததன் பின்னர் நாம் இந்திய வல்லரசுடன் மோத நிர்ப்பந்திக்கப்பட்டோம்,

எமக்கும் இந்தியாவுக்கும் சண்டை ஆரம்பித்த 1987—10—10 அன்று கோப்பாய் — கைதடிப் பாதையால் கோப்பாயை நோக்கி முன்னேறிய இந்திய இராணுவத்துடன் ஏற்பட்ட நேரடி மோதலில் 2 ம் லெப். மாலதி வீரச்சாவைத் தழுவிக்கொண்டாள்.—என்று அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# இலங்கை அரசு-புலிகள்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வார்த்தை மூலம் தீர்வு ஒன்று காணப்படும் பட்சத்தில் திரு. பிரபாகரனின் அந்தஸ்த்தை இந்தியா புதுக்கி அமைக்குமா?

பதில்; அரசுக்கும் புலிகளுக்கும் இடையேயான இந்த நடவடிக்கைகள் குறித்து நாம் மிகவும் உன்னிப்பாக அவதானித்து வருகிறோம். அவை சம்பந்தமாக அக்கறை உடையவர்களாகவும் உள்ளோம்.

தீர்மானிக்க வேண்டிய பிரச்சினைக்குரிய இத்தகைய விடயங்களில் எதனையும் அனுமானித்துக் கூறுவது மிகவும் கஷ்டமாகும்.

கேள்வி: நான் கேட்பது என்னவெனில், அரசுக்கும் புலிகளுக்கும் இடையே இணக்கம் ஒன்று ஏற்பட்டால் —

நீங்கள் திரு. பிரபாகரனை இலங்கை அரசியல் தலைவர்களில் ஒருவராக ஏற்றுக் கொள்வீர்களா என்பது தான்.

பதில்: உங்களது நாட்டில் நடக்கப்போவது குறித்து முன்னரே அனுமானித்துக் கூறுவது கஷ்டமானதாகும்.

கேள்வி: இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்காக கைச்சாத்திடப்பட்ட இலங்கை — இந்திய ஒப்பந்தம் இப்போது செயல் இழந்துவிட்டது. இது குறித்து உங்கள் கருத்து என்ன?

பதில்: நாம் நல்லெண்ணம் நம்பிக்கையுடனேயே ஒப்பந்தத்தை உருவாக்கினோம். இரு சாராரும் ஒருவருக்கு மற்றவர் உதவும் நன்னோக்கத்துடனேயே இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. இது மிகவும் தெளிவானதாகும். அத்தகைய ஒரு தீர்வுக்கு இந்தக் கதி ஏற்பட்டிருக்கக் கூடாது.

கேள்வி; இலங்கை — இந்திய ஒப்பந்தத்தைப் புறக்கணித்து அதற்கு அப்பால் பட்ட தீர்வு ஒன்று உருவானால் என்ன நிலைப்பாட்டை எடுக்கும்?

பதில்: அப்படி ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டால் அது குறித்து பல வழிகளிலும், வகைகளிலும் ஆராயப்பட வேண்டும். (அ)

### புலிகளுடன்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

உத்வேகத்துடன் அரசு செயல்பட வேண்டும்.

யுத்த நிறுத்தம் ஒன்றுக்கு வழிகாட்டும் எந்த சமாதான நடைமுறையையும் நான் வரவேற்கின்றேன். சமாதானத்தைக் காணவே ஐக்கிய தேசியக் கட்சியும் உறுதி பூண்டுள்ளது,

1980 முதல் ஐக்கிய தேசியக் கட்சி இந்தியாவுடனும் மற்றும் அனைத்துக் கட்சி மாநாடு மூலமாகவும் பேச்சுகளை நடத்தி வந்தது. அந்தத் தேடுதலின் பலன்தான் இந்திய — இலங்கை உடன்படிக்கையாகும்.

சில காலமாக நிபந்தனை இன்றி பேச்சுகளை நடத்த விடுதலைப் புலிகள் முன் வந்திருந்தனர். நாடாளுமன்றத் தேர்தலின் பின்னர் விடுதலைப் புலிகளுடன் பேசுவதற்கு ஜனாதிபதி விஜேதுங்காவும் எண்ணியிருந்தார்.

எனது ஒருமாத கால ஜனாதிபதி தேர்தல் பிரசாரத்தில் இனப்பிரச்சினையும் முக்கிய இடம் பெறும். நான் மக்களுடன் பேச்சு நடத்தவே எண்ணியுள்ளேன்.

மாகாணசபை முறையை கொண்டு வந்த 13ஆவது அரசமைப்புத் திருத்தம் மற்றும் இந்திய — இலங்கை உடன்பாடு ஆகியவற்றில் இருந்து தீர்வைக் கட்டியெழுப்பவும் நான் தயாராகவுள்ளேன்.

—இவ்வாறு காமினிதிஸநாயக்கா மேலும் தெரிவித்தார். (எ)

# நினைவுக்கல் நடுகலும் வித்துடல் விதைப்பும்

கடந்த மாதம் 25 ஆம் திகதி யாழ். மாவட்டத்தில் படையினருடன் இடம்பெற்ற மோதலில் வீரச்சாவடைந்த லெப்டினன்ட் செம்மலை அல்லது கௌசலனின் (கந்தையா குமார் — திருநெல்வேலி) உருவப்படமும் —

கடந்த வெள்ளியன்று இடம்பெற்ற வெடி விபத்தில் வீரச்சாவடைந்த 2 ஆம் லெப்டினன்ட் குலேந்திரன் அல்லது காந்தரூபனின் (செல்வராசா தவநேசன் — ஐந்து சந்தி, யாழ்ப்பாணம்) வித்துடலும் இன்று கோப்பாய் மாவீரர் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

முன்னராக உருவப்படமும் வித்துடலும் இன்று முற்பகல் 9 மணிக்குப் பின் யாழ். முஸ்லிம் பகுதியில் உள்ள கார்த்திகா பாலர் பாடசாலையில் மக்களின் இறுதி வீரவணக்கத்துக்காக வைக்கப்படும். இறுதி வீரவணக்கக் கூட்டமும் அங்கு இடம்பெறும்.

பின்னர் சகல இராணுவ மரியாதைகளுடன் கோப்பாய் மாவீரர் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு லெப் செம்மலைக்கு நினைவுக்கல் நடப்படும். 2 ஆம் லெப். குலேந்திரனின் வித்துடல் புனித குழியில் விதைக்கப்படும். (ஐ)

# சூட்டு சம்பவ பின்னணியில் பொலீஸின் காதல் விடயம்

கொழும்பு, ஒக். 10 புத்தளம் மாவட்டம் — இரணவிலவில் சில தினங்களுக்கு முன்னர் பொலீஸார் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் உயிரிழந்த சம்பவத்திற்கான அடிப்படைக் காரணம் அப்பகுதியில் உள்ள பெண்ணொருவருக்கும் பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவருக்கும் இடையேயான காதல் என்று தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இக்காதல் விவகாரம் தொடர்பாக பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்த டேமியன் என்பவரை அங்கு நின்ற சில பொலீஸார் தாக்கினார்கள் என்றும் —

அதனால் ஆத்திரமடைந்த பொதுமக்கள் அமெரிக்க ஒலிபரப்பு நிலையத்துக்குச் செல்லும் வீதிக்கருகில் இருந்த பொலீஸாரின் காவலரணை அடித்து நொருக்கினர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

பொலீஸார் முறைப்பாட்டுக்காரர் டேமியன் மீது நடத்திய தாக்குதலைக் கண்டித்து மறுநாள் ஊர்மக்கள் அமெரிக்க ஒலிபரப்பு நிலையத்திற்குச் செல்லும் வீதியை மறித்து உண்ணாவிரதமிருந்தனர். அதனைக் கலைக்க பொலீஸார் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தின் போதே எச். ஏ. ஹென்றி பெர்னாண்டோ என்பவர் கொல்லப்பட்டார்.

இத்தவல்களை நேரில் அங்கு சென்று திரட்டிய பிரதி அமைச்சர் பெர்னாண்டோ புள்ளே வெரித்தாஸ் வானொலிக்குத் தெரிவித்தார். (எ-6)

## மரண அறிவித்தல்

### திருமதி இராசம்மா சேனாதிராசா

இமையாணன், உடுப்பிட்டியைச் சேர்ந்த திருமதி இராசம்மா – சேனாதிராசா அவர்கள் 08 – 10 – 94 சனிக்கிழமையன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சரவணமுத்து சேனாதிராசா (ஓய்வுபெற்ற விகிதர், நீர்ப்பாசனத் திணைக்களம்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற இராமலிங்கம் சின்னத்தங்கம் தம்பதியினரின் அன்பு மகளும், இ. சுப்பிரமணியம் (ஓய்வுபெற்ற தொழில் நீதிமன்றத் தலைவர், அவுஸ்ரேலியா), இ. ஆறுமுகசாமி (ஓய்வுபெற்ற பிரதம கணக்காளர், உணவுத் திணைக்களம்) ஆகியோரின் அருமைச் சகோதரியும், காலஞ்சென்ற அற்புதசுந்தரி – வைத்திலிங்கம் (நல்லூர்), லோகநாயகி – அப்புத்துரை ஆகியோரின் அன்பு மைத்துனியும், கு. சத்தியலட்சுமி (ஆசிரியை, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), சே. இரவீந்திரநாதன், சே. இராஜதிலகம் (ஓய்வுபெற்ற தொழில்நுட்ப அதிகாரி, நீர்ப்பாசனத் திணைக்களம்), காலஞ்சென்ற சே. சித்திராலட்சுமி, சே. சுரேந்திரநாதன் (நீர்ப்பாசனத் திணைக்களம், வவுனிக்குளம்), க. ஜெயலட்சுமி (ஆசிரியை, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி) ஆகியோரின் அருமைத் தாயாரும் —

க. குமாரசுப்பிரமணியம் (மாகாண சபை, திருகோணமலை), இ. பராசக்தி, இ. தனலட்சுமி (ஆசிரியை, அச்சுவேலி புனித திரேசா மகா வித்தியாலயம்), சு. மங்கையர்க்கரசி, பொ. கந்தசாமி (முன்னாள் ஆசிரியர், உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி), இந்திராதேவி நடராஜா (அவுஸ்திரேலியா), டாக்டர் சித்திராதேவி–விஜயகுமார் (அவுஸ்திரேலியா), ஆ. முரளீதரன் (கணக்காளர் U. K.), அ. குமுதினி (முன்னாள் ஆசிரியை, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), அ. முகுந்தன் (Quantity Surveyor) அ. வாஹினி, அ. மாதினி, அ. ஜனனி, அ. துஷ்யந்தன் ஆகியோரின் அருமை மாமியாரும், கு. பவஹாரிணி (நுண்கலைப்பீட மாணவி), கு. நாதஸ்வரூபிணி, கு. வித்தியானந்தி, இ. சியாமசுந்தரன், இ. தாரிணி, இ. பாமினி, இ. அபிராமி, க. சேயோன், சு. கோசலை கோபன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10–10–94) திங்கட்கிழமை முற்பகல் 10–00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். உறவினர்கள், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

தகவல்:
சே. இரவீந்திரநாதன்

''சத்தியவாசா'',
இமையாணன்,
உடுப்பிட்டி. (33269)

# வடமராட்சி கிழக்கில்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

விமானப் படையினர் தாக்குதல் நடத்திய வேளை கட்டைக்காடு வெற்றிலைக்கேணி படைமுகாம்களில் இருந்து குடியிருப்புகளை நோக்கி பலத்த ஷெல் தாக்குதல்களும் நடத்தப்பட்டன.

தாக்குதல்களுக்கு அஞ்சி உடுத்துறையில் இருந்து இடம்பெயர்ந்து சென்று கொண்டிருந்த 18 வயதான இளைஞர் ஒருவர் ஷெல் தாக்குதலினால் பலியானதாகத் தெரிவிக்கப்பட்டது.

படையினரின் அகோரத்தாக்குதல்களால் உடுத்துறை, ஆழியவளை, தாளையடி, செம்பியன்பற்று ஆகிய பகுதிகளில் இருந்து மக்கள் அதிக எண்ணிக்கையில் இடம்பெயர்ந்து பாதுகாப்பான இடங்களுக்குச் சென்றனர்.

படையினரின் தாக்குதல்களினால் பொதுமக்களின் உடைமைகளுக்குப் பெரும் சேதம் ஏற்பட்டுள்ளது. பயன்தரும் மரங்கள் பலவும் நாசமாகின. (ஐ)

# அரசாங்கம் தானாகவே....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

படி அரசாங்கத்தை வற்புறுத்தும் ஒரு முயற்சியாக வெற்றிலைக்கேணியில் கப்பல் தகர்க்கப்பட்டிருக்கலாம் என்று அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதற்கிடையில்—

சமாதானப் பேச்சுக்கு உதவும் வகையில் பாரிய இராணுவத் தாக்குதல்களை இராணுவம் இடைநிறுத்தம் செய்துள்ளதாகவும்—

வெற்றிலைக்கேணியில் கப்பல் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதல் இதில் மாற்றத்தை ஏற்படுத்தாது என்றும் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் கெமுனு குலதுங்கா தெரிவித்தார். (எ-5)

நாளை முதல் 11-10-1994 நீங்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த.......

✶ நெல்லியடி - மகாத்மா, ✶ சாவகச்சேரி - தெய்வேந்திரா ✶ யாழ் - ஸ்ரீதர் ஆகிய அகலத் திரை அரங்குகளில்

முல்லை. மாவட்டக் கலை, பண்பாட்டுக் கழகமும் நிதர்சனமும் இணைந்து உருவாக்கிய

பொ. தாசனின் இன்னும் ஒரு நாடு

✶ தமிழீழ திரைப்பட வரலாற்றில் இன்னும் ஒரு பாய்ச்சல்.........
✶ வயிறு குலுங்க சிரிக்க வைக்கும் நகைச் சுவைக் காட்சிகள்.........
✶ ஆங்கில திரைப்படங்களை மிஞ்சும் சண்டைக் காட்சிகள்........
✶ உள்ளத்தை உருக்கும் உணர்ச்சி மிகு காட்சிகள்.........
✶ நிறைந்த வண்ணச் சித்திரம்........

குடும்பத்தோடு பார்த்து மகிழுங்கள்

தினசரி 4-00 மணி 6-00 மணி

சனி, ஞாயிறு காலை 10-30 2-30 4-30 6-30 மணி

[333271]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை ... உதயன் ... அச்சகத்தில் 10 - 10 - 1994 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.